2012 நவம்பர் 2]

உறுப்பினரின் கோரிக்கையை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

29—

மாணவர் விடுதி

***13036—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகரில் சிறுபான்மையினர் மாணவர்களுக்கு விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், நாளைய பாரதத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்க இருக்கும் மனித நேயம் மிக்க மாணிக்கத் தலைவி, தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வராக விளங்கும் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 3 ஆம் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஒரு வார காலத்திற்குள் தமிழகத்தில் 56 விடுதிகளை அமைத்து, அதிலும் சிறுபான்மையினருக்காக 6 பள்ளி மற்றும் கல்லூரிகளில் மாணவ, மாணவிகளுக்காக விடுதிகளை அமைத்து சாதனை புரிந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேலூர் மாவட்டம், ஆம்பூர் தொகுதியில் சிறுபான்மையின மாணவர்களுக்காக சிறுபான்மையினர் நல விடுதி அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகரத்திலே சிறுபான்மையினர் நடத்தக்கூடிய கல்லூரி இருக்கின்றது. அங்கே 1,600 மாணவர்கள் படிக்கின்றார்கள். அங்குள்ள பேர்ணாம்பட்டு நகரத்திலிருந்தும், குடியாத்தம் நகரத்திலிருந்தும், பள்ளிகொண்டா பகுதியிலிருந்தும் மாணவர்கள் அந்தக் கல்லூரிக்கு வந்து படிக்கின்றார்கள். அங்கே நீண்ட நாட்களாக சிறுபான்மையினர் மாணவர் விடுதி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள். கல்லூரி நிருவாகத்தின் சார்பிலும் என்னிடம் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாணவர் விடுதி கட்டுவதற்காக ஆம்பூர் முஸ்லீம் கல்விச் சங்கம் இடம் அளிப்பதற்கும் தயாராக இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்து, ஆம்பூர் தொகுதியிலே சிறுபான்மையினர் மாணவர் விடுதி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அந்த இடத்தில் ஆய்வு செய்து, அங்கு உண்மையிலேயே விடுதி தேவைப்படும் என்றால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையுடன் அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதியில் உசிலம்பட்டிக்கு அருகிலே பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கலைக் கல்லூரி இருக்கிறது. அதற்கு அருகிலே கருமாத்தூரில் அருளானந்தர் கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரிகள் இரு பாலரும் படிக்கின்ற கல்லூரிகள். அங்கு அரசினர் விடுதி பெண்களுக்கு இல்லை. உசிலம்பட்டியில் கள்ளர் சீரமைப்புத் துறையின் சார்பிலே, 100 மாணவிகள் தங்கிப் படிக்கக்கூடிய அளவிலே, ஒரு பெண்கள் கல்லூரி விடுதி அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் சிறுபான்மையினருக்கு நிறைய திட்டங்களையும், பொறியியல் கல்லூரிகளையும், செவிலியர் கல்லூரிகளையும் அமைத்து மாண்புமிகு அம்மா அவர்கள் சாதனை படைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடத்தில் விடுதி தேவைப்பட்டால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 5, 6 மற்றும் 7)@

* பட்டியல் 5

1—

பணியிடங்கள்

வினா எண் 5629—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டத்தில் கருவூலத் துறையின்கீழ் காலியாக உள்ள 46 பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.